# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : **திரு. மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 379 /பேரூ/2025**
**நாள் : 07.05.2026**

M. பாலசுப்ரமணியன்,
அண்ணாமலை நகர்,
கடலூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
அண்ணாமலைநகர் சிறப்புநிலை பேரூராட்சி,
கடலூர் மாவட்டம். - எதிர் மனுதாரர்

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், அண்ணாமலைநகர், K.R.M. நகர், 2C, 8வது குறுக்குத் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. பாலசுப்ரமணியன் என்பவரது 31.10.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.11.2025 அன்று பெறப்பட்டு, 379/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், அண்ணாமலைநகர், K.R.M. நகர், 2C, 8வது குறுக்குத் தெரு என்ற முகவரியில் வசிக்கும் மனுதாரர் திரு. M. பாலசுப்ரமணியன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 31.10.2025 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

“நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது குடியிருந்து வரும் வீடானது எனது சகோதரர் அவர்களால் 2005ல் அண்ணாமலைநகர் பேரூராட்சி மூலம் கட்டிட அனுமதி பெற்று இந்தியன் வங்கியில் கடன் பெற்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

எனது வீட்டிற்கு குடிநீர் இணைப்பு, சாலை வசதி, தெருவிளக்கு வசதி வேண்டி பலமுறை பேரூராட்சி நிர்வாகத்திடம் முறையிட்ட போதும் எனக்கு தேவையான அடிப்படை வசதிகளை பேரூராட்சி நிர்வாகம் செய்ய மறுத்தது. இந்நிலையில் நான் சிதம்பரம் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண். 189/2010ன் கீழ் வழக்கு தொடர்ந்து எனக்கு தேவையான அடிப்படை

வசதிகளை பேரூராட்சி நிர்வாகம் செய்து தர வேண்டி 18.08.2015ல் உத்தரவு பெற்றுள்ளேன். இந்நிலையில் 2023ஆம் ஆண்டு சிவபுரி ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான JPS அவென்யூவில் DTCP அனுமதி பெறாமல் ஊராட்சி மன்ற அனுமதி பெற்று திரு. P. பன்னீர் செல்வம் என்பவர் நகர் அமைத்துள்ளார். இந்நகரில் சுமதி என்பவரும், ரத்தினசபாபதி என்ற இருவரும் மிகக் குறைந்த விலைக்கு மனை வாங்கி வீடு கட்டி உள்ளனர். இந்நகரின் அருகாமையில் கான்சாஹிப் வாய்க்கால் பிச்சாவரத்திற்கு செல்கிறது.

JPS அவென்யூ நகர் மொத்தம் 10 மனைப்பிரிவை கொண்டுள்ளது. இதில் 5 மனைகளுக்கு மட்டுமே 2004ல் இடத்தின் உரிமையாளர் சிவபுரி ஊராட்சி மன்ற அனுமதியை பெற்றுள்ளார். மீதமுள்ள 5 மனைப்பிரிவுகள் இன்றுவரை ஊராட்சி மன்ற அனுமதியையோ அல்லது DTCP அனுமதியையோ பெறவில்லை. மேலும் இந்நகரின் மிக அருகாமையில் கான்சாஹிப் வாய்க்கால் செல்வதால் மற்ற 5 மனைப்பிரிவுகளுக்கான அனுமதி வழங்கப்படாமல் உள்ளது. இதனால் இந்நகர் எவ்வித அடிப்படை வசதியும் பெறாமல் உள்ளது. JPS அவென்யூவில் மனைகளை வாங்கியுள்ளவர்கள் எதிர்கால அடிப்படை வசதிகளான சாலை, குடிநீர், தெருவிளக்கு வசதி பற்றி சற்றும் சிந்திக்காமல் வாங்கி உள்ளனர்.

JPS அவென்யூவில் மனைகளை வாங்கியவர்கள் சிவபுரி ஊராட்சி ஒன்றியத்தை ஒருநாள் கூட அணுகி தங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டி வட்டார வளர்ச்சி அதிகாரியை நேரில் சந்தித்து பேசாமல். குடிநீர் இணைப்பு வேண்டி அண்ணாமலை நகர் பேரூராட்சி நிர்வாகத்தை தொந்தரவு செய்வது சரியில்லை.

JPS அவென்யூவில் வீடுகட்டி உள்ளவர்கள் தங்களின் வீட்டுவரி, சொத்துவரி, தண்ணீர் வரிகளை சிவபுரி ஊராட்சி ஒன்றியத்திற்கு செலுத்தி வருகின்றனர். இவ்வாறு இருக்கையில் JPS அவென்யூவில் உள்ள வீடுகளுக்கு அண்ணாமலை நகர் பேரூராட்சியின் குடிநீரானது 2023 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

JPS அவென்யூ வீடுகள் அனைத்தும் மிகவும் பள்ளமான பகுதியில் உள்ளது. எங்களது மேலவெளித் தெருவில் உள்ள 6 வீடுகள் மிகவும் மேடான பகுதியில் உள்ளன. அண்ணாமலைநகர் பேரூராட்சி எல்லையில் உள்ள KRM நகர் வீடுகளுக்கு பேரூராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கி வருகிறது. இதன்படி 2023லிருந்து JPS அவென்யூவிற்கு பேரூராட்சி நிர்வாகம் இலஞ்சத்தை பெற்று தண்ணீர் வழங்கி வருகிறது. இதனால் மேடான பகுதியில் உள்ள எனது வீட்டிற்கு சரிவர தண்ணீர் கிடைப்பது இல்லை. மேலும் KRM நகரில் வீடுகட்டி உள்ள அனைவரும் பேரூராட்சிக்கு சொந்தமான மெயின் குழாயிலிருந்து மின் மோட்டாரை பொருத்தி தினமும் காலையும், மாலையும் இரு வேளையும் நீரை உறிஞ்சி வீடுகளுக்கு பயன்படுத்தி வருகின்றனர். இதுபற்றி நான் ஏற்கனவே இருந்த E.O. திரு. பாலமுருகனிடம் மனு அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தற்போது உள்ள E.O. திருமதி, K. கோமதி அவர்களிடமும் 04.07.2025ல் பேரூராட்சிக்கு சொந்தமான மெயின் குழாயில் மின்மோட்டாரை பொருத்தி நீர் உறிஞ்சுவதை கண்டறிந்து குடிநீர் இணைப்பை துண்டிக்குமாறும் JPS அவென்யூவில் உள்ள பொதுகுடிநீர் குழாயை வேறு இடத்தில் மாற்றி அமைக்க வேண்டியும் மனு அளித்துள்ளேன். ஆனால் தற்போதைய E.O. என் மனு மீது நடவடிக்கை எடுக்கவில்லை.

02.08.2025ல் பேரூராட்சிகளின் இணை இயக்குநருக்கும், துணை முதல்வருக்கும் நான் மனு அனுப்பி உள்ளேன். இம்மனுவில் JPS அவென்யூவில் முறைகேடாக பயன்படுத்தி வரும் குடிநீர் இணைப்பை துண்டிக்க நடவடிக்கை எடுக்க வேண்டி கேட்டுள்ளேன்.

04.08.2025ல் கடலூர் மாவட்ட ஆட்சியருக்கு JPS அவென்யூவில் திருட்டுத்தனமாக எடுக்கப்பட்டுள்ள பொதுகுடிநீர் குழாய் இணைப்பை நிரந்தரமாக துண்டிக்க வேண்டி மனு அளித்துள்ளேன். இப்பொது குடிநீர் குழாயில் சுமதியும், ரத்தினசபாபதியும் புகைப்படத்தில் காட்டியுள்ளவாறு PVC ஒஸ் மூலம் 24 மணிநேரமும், தினமும் தண்ணீரை பயன்படுத்தி வருகின்றனர். இதனால் எனக்கு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுகிறது. தினமும் காலை 6.30 மணிமுதல் 7.30 மணிவரையிலும், மாலை 4.30 மணிமுதல் 5.30 மணிவரையிலும் தண்ணீர் வழங்க வேண்டி கேட்டுள்ளேன். ஆனால் பேரூராட்சி நிர்வாகம், விடிய, விடிய தண்ணீரை வழங்கி வருகிறது.

10.09.2025ல் பொது தகவல் அதிகாரி ஊராட்சி ஒன்றியம் பேரூராட்சிக்கு RTI மனு அனுப்பி உள்ளேன். இம்மனுவில் நான் இரண்டு இனங்களின் கீழ் தகவல் கேட்டுள்ளேன். இதில் முதலாவது இனத்தில் JPS அவென்யூவில் அமைக்கப்பட்டுள்ள பொதுவழி சாலையை சிவபுரி ஊராட்சி ஒன்றியத்திற்கு மனைப்பிரிவின் உரிமையாளர் ஒப்படைப்பு செய்துள்ளாரா என்று கேட்டுள்ளேன். அதற்கு பொது தகவல் அதிகாரி 08.10.2025ல் எனக்கு வழங்கியுள்ள RTI பதில் கடிதத்தில் இதுநாள் வரையில் OSR Land பொது சாலைகள் மற்றும் பூங்கா அரசின் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டு ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யவில்லை என்று கூறியுள்ளார். 15.09.2025ல் கடலூர் மாவட்ட ஆட்சியருக்கு ஆட்சேபனை மனு அளித்துள்ளேன். அம்மனுவில் அண்ணாமலை நகர் பேரூராட்சி தண்ணீரை சிவபுரி ஊராட்சி ஒன்றிய வீடுகளுக்கு வழங்குவதை தடை செய்யக் கோரி கேட்டுள்ளேன்.

நான் கேட்டவாறு JPS அவென்யூ வீடுகளுக்கு குடிநீர் வழங்குவதை 10.10.2025 அன்று மாலை சரியாக 5.00 மணிக்கு S.O. துரைராஜ் தலைமையில் பேரூராட்சி பணியாளர்கள் துண்டித்தனர். ஆனால் 28.10.2025 அன்று காலை 9.00 மணிக்கு மீண்டும் JPS அவென்யூ வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

10.09.2025ல் நான் பொது தகவல் அதிகாரி பேரூராட்சி அலுவலகம் அண்ணாமலை நகருக்கு அனுப்பியுள்ள RTI கடிதத்தில் 5 இனங்களின் கீழ் தகவல்களை கேட்டுள்ளேன். இதில் 5வது இனத்தில் நான் கேட்டுள்ள கேள்விக்கு EO, சிவபுரி ஊராட்சிக்குட்பட்ட வீடுகளுக்கு தற்போது வரை வீட்டு குடிநீர் இணைப்பு ஏதும் வழங்கப்படவில்லை. சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்னர் பொதுக் குடிநீர் குழாய் வழங்கப்பட்டுள்ளது. எதன் அடிப்படையில் வழங்கப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் கோப்பில் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

சிவபுரி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட JPS அவென்யூவில் உள்ள பொதுவழிச் சாலை மற்றும் பூங்கா, மனைபிரிவின் உரிமையாளரால் இன்றுவரை ஒப்படைப்பு செய்யப்படவில்லை.

JPS அவென்யூவில் வீடு கட்டியுள்ள ரத்தினசபாபதியும், சுமதியும் பேரூராட்சியின் அனுமதியை பெறாமல் 2023ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை திருட்டுத்தனமாக அண்ணாமலை நகர் பேரூராட்சி தண்ணீரை பயன்படுத்தி வருகின்றனர்.

திருட்டுத்தனமாக எடுக்கப்பட்டுள்ள குடிநீர் குழாய் இணைப்பை S.O. துரைராஜிடம் துண்டிக்கக் கோரி பலமுறை போராடியும் பொது ஊழியரான இவர் தனது கடமையை சரிவர செய்யவில்லை. மேலும் திருட்டுத்தனமாக எடுக்கப்பட்டுள்ள குடிநீர் குழாயை துரைராஜ் S.O. துண்டித்தால் துரைராஜ் பதவியை தலைவர் பழனி காலி செய்து விடுவார் என்று கூறுகிறார்.

2023ல் அண்ணாமலை நகர் பேரூராட்சியின் EO பணியில் இருந்த G. பாலமுருகன் தான் JPS அவென்யூவிற்கு குடிநீர் குழாய் இணைப்பை கொடுத்தார் என்று தற்போதைய EO கூறுகிறார். ஆனால் EO பாலமுருகனிடம் நான் கைப்பேசி மூலம் தொடர்பு கொண்டு கேட்டதற்கு பாலமுருகன் இப்பேரூராட்சியை விட்டு பணி மாறுதலாகி செல்லும் வரை JPS அவென்யூவிற்கு வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ எவ்வித அனுமதியும் அளிக்கவில்லை என்று கூறுகிறார். இதற்கான கைப்பேசி உரையாடலும் என்னிடம் உள்ளது.

அண்ணாமலைநகர் பேரூராட்சிக்கு எவ்வித கட்டணமும் சிவபுரி ஊராட்சி மன்றம் செலுத்தாமல் மாவட்ட ஆட்சியரின் அனுமதியை பெறாமலும் அண்ணாமலைநகர் பேரூராட்சி குடிநீர், உப விதிகளுக்கு முரணாகவும் பேரூராட்சி தண்ணீர் வழங்குவது குறித்து 29.10.2025ல் 10 இனங்களின் கீழ் தகவலை அண்ணாமலைநகர் EOவிடம் கேட்டுள்ளேன். JPS அவென்யூவிற்கு குடிநீர் வழங்குவது குறித்து மாவட்ட ஆட்சியர் அனுமதி வழங்கவில்லை. பேரூராட்சி குடிநீர் உப விதிகளில் திருத்தம் செய்வது குறித்து மாவட்ட ஆட்சியரின் அனுமதி மாவட்ட அரசிதழில் வெளியிடப்படவும் இல்லை.

<u>நான் கோரும் பரிகாரம்:</u>

சட்ட விதிமுறைகளை மீறி பேரூராட்சி EO கோமதியும், SO துரைராஜும், A2 கிளார்க் பாரதிதாசனும், AD முகம்மது ரிஷ்வான் அவர்களும் செயல்பட்டுள்ளதாலும், பொது ஊழியராக இருந்து கொண்டு தனது கடமையை சரிவர செய்ய தவறியதாலும் உள்ளாட்சி முறைமன்ற நடுவ விதிமுறைகளுக்கு உட்பட்டு சட்டப்படியான, துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறும் அண்ணாமலைநகர் பேரூராட்சி குடிநீரை JPS அவென்யூக்கு வழங்குவதை துண்டிக்குமாறும் JPS அவென்யூக்கு குடிநீர் வழங்க உரிய நடவடிக்கை எடுக்க சிவபுரி ஊராட்சிக்கு உத்திரவிடுமாறும், எனக்கு தொடர்ந்து குடி தண்ணீரை வழங்கிட உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கனம் பொருந்திய உள்ளாட்சி முறைமன்ற நடுவத்தை பிரார்த்திக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 19.11.2025 நாளிட்ட அறிவிப்பின் மூலம் அண்ணாமலைநகர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் செயல் அலுவலரிடமிருந்து எவ்வித அறிக்கை பெறப்படவில்லை.

3. எனினும் மனுதாரர் மற்றும் அண்ணாமலைநகர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை இம்முறைமன்றத்தில் 17.03.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன் மற்றும் விரிவான அறிக்கையுடன் ஆஜராகுமாறு 25.02.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இதற்கிடையில் எதிர்மனுதாரரான அண்ணாமலைநகர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 13.03.2026 நாளிட்ட எதிர்வாதுரையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

(1) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவானது உண்மைக்கு புறம்பான அம்சங்களுடனும், சட்டத்திற்கு அப்பாற்பட்டும் அமைந்து காணப்படுகிறது. மனு தள்ளுபடிக்கு உகந்தது ஆகும்.

(2) கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், அண்ணாமலைநகர் பேரூராட்சியானது கடந்த 04.04.1963ஆம் ஆண்டு முதல் முதல்நிலை பேரூராட்சியாக துவங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு 31.05.1994ஆம் வருடம் முதல் சிறப்புநிலை பேரூராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. புகழ்மிக்க சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகம் இப்பேரூராட்சியின் எல்லைக்குட்பட்டு அமைந்து பல மாணவ மாணவியர்களின் கல்வி திறன் மேம்பாடு அடைய பயன்பட்டு வருகிறது.

(3) மனுதாரர் புகார் மனுவில் தெரிவித்துள்ள ஜெபிஎஸ் அவென்யூ என்ற பகுதி அண்ணாமலைநகர் பேரூராட்சி கே.ஆர்.எம். நகர் 8வது குறுக்கு தெருவினை ஒட்டிய பகுதியாகும். அப்பகுதியில் 2 வீடுகள் உள்ளன. அவ்வீடுகளுக்கு ஊராட்சி நிர்வாகத்தின் மூலமாக குடிநீர் இணைப்பு வழங்கி குடிநீர் விநியோகம் செய்ய வழிவகை இல்லாத நிலையில் (உப்பனாறு இடையில் செல்வதால்) ஊராட்சி பகுதியிலிருந்து தனித்த பகுதியாக உள்ளது. குடியிருப்போர்களின் அடிப்படை உரிமையும், மனிதாபிமானத்தையும் கருத்தில் கொண்டு மூன்றாண்டுகளுக்கு முன்பு அண்ணாமலைநகர் பேரூராட்சி மூலம் அப்பகுதி குடியிருப்போரின் குடிநீர் தேவைக்காக பொது குடிநீர் குழாய் அமைக்கப்பட்டது. இப்போது குடிநீர் குழாய் அமைக்கப்பட்டதால் மனுதாரருக்கோ அல்லது அப்பகுதியில் வசிக்கும் இதர பொது மக்களுக்கோ குடிநீர் வழங்குவதில் எந்தவித குறைபாடும் ஏற்படவில்லை. இருப்பினும் மனுதாரர் புகாரின் அடிப்படையில் மனுதாரர் வீட்டிற்கு குடிநீர் தடையின்றி வருகிறதா என்பதை ஆய்வு செய்ய பேரூராட்சி பணியாளர்கள் சென்றால் அவர்களை அத்துமீறி நுழைந்ததாக காவல் நிலையத்தில் புகார் செய்வேன் என மிரட்டுவதால் பணியாளர்கள் மனுதாரர் வீட்டிற்கு செல்ல அஞ்சுகின்றனர்.

(4) புகார்தாரர் இப்பொது குடிநீர் குழாயினை அகற்றியே தீர வேண்டும் என்ற நோக்கில் அப்பகுதியில் குடியிருக்கும் குடியிருப்பு வாசிகளை அச்சுறுத்தி வந்த காரணத்தால் அப்பகுதி மக்கள் தொடர்ந்து குடிநீர் வழங்கிட கோரி செயல் அலுவலருக்கு மனு அனுப்பி உள்ளனர். மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் மக்கள் குறை தீர்க்கும் (GDP) முகாமிலும் மனு அளித்திருந்தனர். இம்மனு தொடர்பாக மாவட்ட ஆட்சியர் அவர்களின் வாட்ஸ் ஆப் செய்தியிலும் அண்ணாமலைநகர் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து மனுதாரருக்கு முடிவான பதில் அனுப்பிட தெரிவிக்கப்பட்டது. மேலும், ஊராட்சி பகுதியில் வசிக்கும் 2 வீடுகளுக்கு அண்ணாமலைநகர் பேரூராட்சி மூலம் தொடர்ந்து குடிநீர் வழங்க கோரி குமராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சிவபுரி ஊராட்சி செயலாளர் திரு. டி. வடிவேல் என்பவர் 12.08.2025ஆம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார். அதன் அடிப்படையில் பொது குடிநீர் குழாய் மூலம் தொடர்ந்து குடிநீர் வழங்கிட இப்பேரூராட்சி மன்ற தீர்மான எண். 401, நாள் 20.08.2025ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும், கேட்வால்வ் பொருத்தி குடிநீர் குழாயினை உயர்த்தி அமைக்கப்பட்டு குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

(5) புகார் மனுதாரர் பேரூராட்சிக்கு எதிராக உண்மைக்கு புறம்பான புகார்களை தொடர்ச்சியாக புகார் மனுக்களாக அனுப்பி வருவதுடன் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு 2023ல் முறையீடு செய்து அதன் பேரில் 334/பேரூ.2/2023 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு 20.12.2023 அன்று விசாரணையில் கலந்து கொண்டு வாக்குமூலத்தை சமர்ப்பிக்காமல் சென்றதால் முறையீட்டு மன்றத்தை அவமதித்ததாக கருதி முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டித்துள்ளது. மேலும், அவரால் இம்முறைமன்ற நடுவத்தில் அளிக்கப்படும் மனுக்களுக்கு 6 மாதத்திற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாது என முறைமன்ற நடுவம் ஆணையிட்டுள்ளது.

(6) புகார்தாரர் தொடர்ச்சியாக பேரூராட்சி அலுவலக பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் தகவல் அறியும் உரிமை சட்டம் உள்ளிட்டவற்றை பயன்படுத்தி பல வழிகளில் இடையூறு செய்ததால் தனியரின் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க பேரூராட்சி மன்றத்தில் விவாதிக்கப்பட்டு, சட்ட விதிமுறைகளுக்குட்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(7) தற்பொழுது சிதம்பரம் நகராட்சி, அண்ணாமலைநகர் பேரூராட்சி மற்றும் சிவபுரி ஊராட்சி உட்பட 10 ஊராட்சிகள் உள்ளடக்கி அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் அனைத்து பகுதிகளிலும் குடிநீர் குழாய் பொருத்தப்பட்டு கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் திட்ட குடிநீர் விநியோகம் செய்ய தயார் நிலையில் உள்ளது. விரைவில் திட்டம் செயல்பாட்டிற்கு வரும் பொழுது அப்பகுதிக்கும் சேர்த்தே குடிநீர் விநியோகம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(8) தனித்த பகுதியான ஊராட்சி பகுதியில் வசிக்கும் 2 குடும்பத்தினரின் குடிநீர் தேவையை கருதியே சட்ட விதிமுறைகளுக்குட்பட்டு பொது நீர் குழாய் அமைக்கப்பட்டுள்ளது. இதில் விதி மீறலோ முறைகேடோ ஏதும் நடைபெறவில்லை.

(9) புகார்தாரர் அப்பகுதியில் வசிக்கும் மக்களுடனான தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சி காரணமாக பொதுநலன் ஏதுமின்றி அண்ணாமலைநகர் பேரூராட்சியில் பணிபுரியும் செயல் அலுவலர் மற்றும் பணியாளர்கள் மீது வேண்டுமென்றே பொய் புகார்களை அனுப்பி வைப்பதும், பின்னர் அவர்களிடம் சமரசம் ஆகி அந்த மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம் என எழுதி கொடுப்பதும் வழக்கமாக கொண்டுள்ளார். அவ்வாறே முன்னாள் செயல் அலுவலர் திரு. கோ. பாலமுருகன் என்பவர் மீது பல்வேறு புகார்கள் தெரிவித்த நிலையில் சமரசமாகி அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று தெரிவித்து கடிதம் அளித்துள்ளார்.

(10) புகார்தாரருக்கும் குடியிருப்பு வாசிகளுக்கும் இடையே ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சியின் காரணமாக குடிநீர் விநியோகம் செய்யக் கூடாது என அவர்களை பழிவாங்கும் நோக்கில் புகார் மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனுவில் கூறப்பட்டுள்ள அனைத்தும் ஏற்புடையது அல்ல. ஆகவே, மேன்மைமிகு முறைமன்ற நடுவர் அவர்கள் மனுதாரரின் தவறான புகார் மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய இவ்வெதிர் மனுதாரர் பிரார்த்திக்கிறார்" என தெரிவித்துள்ளார்.

5. மனுதாரரான திரு. M. பாலசுப்ரமணியன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 17.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- கடலூர் மாவட்டம், அண்ணாமலைநகர் சிறப்புநிலை பேரூராட்சிக்கு உட்படாத, சிவபுரி ஊராட்சி ஒன்றியத்தின் எல்லைக்குட்பட்ட JPS அவென்யூ என்கிற மனைப்பிரிவுகளுக்கு அண்ணாமலைநகர் பேரூராட்சியால், 2023ஆம் ஆண்டு முதல் முறைகேடாக குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு, குடிநீர் வழங்கி வருவதால், நாங்கள் குடியிருக்கும் பகுதிகளில் குடிநீர் தட்டுபாடு ஏற்படுகிறது எனவும் இப்பகுதியானது மேடாக உள்ளதால் குடிநீர் சீராக வருவதில்லை எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

- பேரூராட்சி செயல் அலுவலர், பேரூராட்சிமன்ற தலைவரும் சிவபுரி ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள JPS மனைப்பிரிவு உரிமையாளரிடம் கையூட்டு பெற்று, விதிமீறி செயல்பட்டு வருகிறார்.

- எங்களது குடியிருப்பில் குடிநீர் தட்டுபாடு ஏற்படுவதால், இப்பகுதியிலுள்ள சில குடியிருப்பாளர்கள் மின்மோட்டார் மூலம் குடிநீரை முறைகேடாக உறிஞ்சி எடுக்கின்றனர். இதனால் மனுதாரரின் வீட்டிற்கு குடிநீர் வாராமல் மேலும் தட்டுபாடு நிலவுகிறது. இதுகுறித்து பேரூராட்சி செயல் அலுவலரிடம் பல முறைகள் புகார் மனு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் செயல் அலுவலரால் மேற்கொள்ளப்படவில்லை.

சிவபுரி ஊராட்சியில் JPS அவென்யூ நகர் ஊராட்சி மன்றத்தின் மூலம் ஊராட்சிமன்ற தலைவரால் மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கப்பட்டது. ஆனால் இதுநாள் வரையில் OSR land (பொது சாலைகள் மற்றும் பூங்கா) அரசின் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டு ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்படாமல் உள்ளது.

சிவபுரி ஊராட்சியில் JPS அவென்யூ நகர் குடிநீர் குழாய் அமைத்திட வேண்டி கடிதத்தினை செயல் அலுவலர், அண்ணாமலைநகர் சிறப்புநிலை பேரூராட்சி 12.08.2025 அன்றுதான் சிவபுரி ஊராட்சி செயலர் கடிதம் அளித்துள்ளார். ஆனால் செயல் அலுவலர் 3 ஆண்டுகளாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் எங்களது பகுதியிலுள்ள வீடுகளுக்கு தினமும் விநியோகம் செய்யப்படும் குடிநீரானது பற்றாக்குறையாக உள்ளதால் போதுமான அளவிற்கு குடிநீரை வழங்கிட ஆவன செய்யுமாறு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

- எனவே சிவபுரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள JPS அவென்யுக்கு முறைகேடாக அண்ணாமலைநகர் பேரூராட்சியால் வழங்கப்பட்ட குடிநீர் இணைப்பை துண்டிக்கவும், எங்களது குடியிருப்பு பகுதிகளில் எவ்வித தடையின்றி குடிநீர் வழங்கிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான அண்ணாமலைநகர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 14.03.2026 நாளிட்ட கடிதத்தில் தான் நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரக பதவி உயர்வு பெற்றுள்ளதால், அப்பதவியில் 16.03.2026 அன்று பணியில் சேர உள்ள நிலையில், 17.03.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு தன்னால் ஆஜராக இயலாது எனவும், தனது

சார்பாக அண்ணாமலைநகர் சிறப்புநிலை பேரூராட்சியின் துப்புரவு அலுவலர் திரு. ப. துரைராஜ் என்பவர் விசாரணைக்கு ஆஜராக அனுமதிக்குமாறு வேண்டி கொண்டுள்ளார். இவரின் கோரிக்கை இம்முறைமன்ற நடுவத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7. அதன்படி அண்ணாமலை நகர் பேரூராட்சி துப்புரவு அலுவலர் திரு. ப. துரைராஜ் என்பவர் **17.03.2026** அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- ➢ மனுதாரர் புகார் மனுவில் தெரிவித்துள்ள சிவபுரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட JPS அவென்யூ பகுதியானது அண்ணாமலை நகர் பேரூராட்சியில் அமைந்துள்ள கே.ஆர்.எம். நகர், 8வது குறுக்கு தெருவினை ஒட்டியுள்ள 2 வீடுகள் மட்டும் உள்ள பகுதியாகும்.
- ➢ மேற்காணும் 2 வீடுகளுக்கு ஊராட்சி ஒன்றியத்தால் குடிநீர் இணைப்பு வழங்கி குடிநீர் விநியோகம் செல்ல வழிவகை இல்லாத வகையில் உப்பனாறு இடையில் செல்வதால் ஊராட்சி பகுதியிலிருந்து தனித்த பகுதியாக உள்ளது.
- ➢ எனவே மனிதாபிமானத்தின் அடிப்படையில் 3 ஆண்டுகளுக்கு முன்பு அண்ணாமலைநகர் பேரூராட்சி மூலம் அப்பகுதி குடிநீர் தேவைக்காக பொது குடிநீர் குழாய் அமைக்கப்பட்டது. இதனால் பேரூராட்சிக்குட்பட்ட பொது மக்களுக்கு குடிநீர் வழங்குவதில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.
- ➢ மேலும் ஊராட்சி பகுதியில் வசிக்கும் 2 வீடுகளுக்கு அண்ணாமலைநகர் பேரூராட்சி மூலம் தொடர்ந்து குடிநீர் வழங்கிட சிவபுரி ஊராட்சி செயலாளர் 12.08.2025 அன்று கடிதம் மூலம் கோரியதன் அடிப்படையில், பொது குடிநீர் குழாய் மூலம் தொடர்ந்து வழங்கிட பேரூராட்சியில் தீர்மானம் (தீர்மானம் எண். 401 நாள் 20.08.2025) நிறைவேற்றப்பட்டு கேட்வால்வ் பொருத்தி குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது.
- ➢ மேலும் தற்போது சிதம்பரம் நகராட்சி, அண்ணாமலைநகர் பேரூராட்சி மற்றும் சிவபுரி ஊராட்சி உட்பட 10 ஊராட்சிகள் உள்ளடங்கிய அனைத்து பகுதிகளுக்கும் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டத்தை செயல்படுத்திட தயார் நிலையில் உள்ள நிலையில் உள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்படும் போது சிவபுரி ஊராட்சி உட்பட அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- ➢ மனுதாரர் குடியிருக்கும் வீட்டிற்கும் மற்றும் அப்பகுதியிலுள்ள குடியிருப்புகளுக்கும் நாள்தோறும் இரண்டுமுறை குடிநீர் தங்குதடையின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.
- ➢ மனுதாரர் புகாராக தெரிவிக்கும் சில குடியிருப்புகளில் மின் மோட்டாரை பொருத்தி குடிநீரை எடுத்தல் குறித்து உரிய விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.
- ➢ சிவபுரி ஊராட்சி தனித்த பகுதியில் வசிக்கும் 2 குடும்பத்தினரின் குடிநீர் தேவையை கருத்திற்கொண்டும், பேரூராட்சி மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதில் எவ்வித விதிமீறலும் நடைபெறவில்லை என்பதை பணிவுடன் இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

8. மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் அண்ணாமலைநகர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் எதிர்வாதுரை மற்றும் பேரூராட்சி துப்புரவு அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் தனது 31.10.2025 நாளிட்ட புகார் மனுவில் அண்ணாமலைநகர் சிறப்புநிலை பேரூராட்சிக்கு உட்படாத சிவபுரி ஊராட்சி எல்லைக்குட்பட்ட JPS அவென்யூ என்ற மனைப்பிரிவுகளுக்கு அண்ணாமலைநகர் பேரூராட்சியால் 2023ஆம் ஆண்டு முதல் விதிமீறி குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு குடிநீர் வழங்கி வருவதால், மனுதாரர் குடியிருக்கும் பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு நிலவுவதாக புகார் தெரிவித்துள்ளார் என்பது தெரியவருகின்றது.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் சிவபுரி ஊராட்சிக்கு உட்பட்ட JPS அவென்யூ பகுதியானது அண்ணாமலைநகர் பேரூராட்சியில் அமைந்துள்ள கே.ஆர்.எம்.நகர் 8வது குறுக்கு தெருவை ஒட்டியுள்ள 2 வீடுகள் மட்டும் எனவும், அவ்வீடுகளுக்கு இடையில் உப்பனாறு செல்வதால் சிவபுரி ஊராட்சியிலிருந்து தனித்த பகுதியாக இருப்பது எனவும் இதனால் ஊராட்சி நிர்வாகம் மூலம் அவ்வீடுகளுக்கு குடிநீர் வழங்கிட வழிவகையில்லை என்பதால், மனிதாபிமானத்தின் அடிப்படையில் அண்ணாமலைநகர் பேரூராட்சி நிர்வாகத்தின் மூலம் சிவபுரி ஊராட்சியில் அமையப்பட்டுள்ள அந்த 2 வீடுகளுக்கு 3 ஆண்டுகளுக்கு முன்பு பொதுகுடிநீர் குழாய் அமைக்கப்பட்டு, குடிநீர் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது எனவும் இதனால் பேரூராட்சி பொதுமக்களுக்கு எவ்வித குடிநீர் தட்டுப்பாடு ஏற்படவில்லை எனவும் தெரிவித்துள்ளதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மூலம் தெரிய வருகிறது.

மேலும் மேற்காணும் 2 வீடுகளுக்கு குடிநீர் வழங்கிட கோரி சிவபுரி ஊராட்சி செயலாளர் சமர்ப்பித்த 12.08.2025 நாளிட்ட கடிதத்தின் அடிப்படையில் பேரூராட்சி மூலம் சிவபுரி ஊராட்சிக்கு உட்பட்ட 2 வீடுகளுக்கு தொடர்ந்து குடிநீர் வழங்கிட பேரூராட்சியில் தீர்மானம் (தீர்மானம் எண். 401, நாள் 20.08.2025) நிறைவேற்றப்பட்டு கேட்வால்வ் பொருத்தி குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளதையும் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை வாயிலாக அறிய வருகிறது.

இவ்வாறு சிவபுரி ஊராட்சிக்கு குடிநீர் வழங்கினாலும், மனுதாரர் குடியிருக்கும் வீட்டிற்கும் மற்றும் அப்பகுதியிலுள்ள குடியிருப்புகளுக்கும் நாள்தோறும் இரண்டுமுறை தங்கு தடையின்றி குடிநீர் வழங்கி வருவதாகவும், மேலும் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டம் செயல்படுத்திட தயார் நிலையில் உள்ள நிலையில், இத்திட்டத்தின் கீழ் சிதம்பரம் நகராட்சி, அண்ணாமலைநகர் பேரூராட்சி மற்றும் சிவபுரி ஊராட்சி உள்ளடங்கிய அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதையும் செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் பேரூராட்சி துப்புரவு அலுவலரின் வாக்குமூலம் வாயிலாகவும் தெரிய வருகிறது.

மேற்காணும் நிலையில், பேரூராட்சி துப்புரவு அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி மனுதாரர் குடியிருப்பிலும் மற்றும் அப்பகுதியிலுள்ள குடியிருப்புகளுக்கும் தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்திடவும் சிவபுரி ஊராட்சிக்கு குடிநீர் விநியோகம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் அமைப்புச் சட்டம் 1998 பிரிவு 159ல் உள்ள விதிமுறைகளை கடைப்பிடிக்குமாறும் மற்றும் மனுதாரர் புகாராக தெரிவித்துள்ள சில குடியிருப்புகளில் மின் மோட்டார் பொருத்தி குடிநீரை எடுப்பது குறித்தும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் தலைமையில் ஒரு குழு அமைத்து, அக்குழு மூலம் ஆய்வு செய்து அதன் அறிக்கையை விரைவில் பெற்று அவ்வறிக்கையின் அடிப்படையில் உரிய நடவடிக்கை

மேற்கொள்ளுமாறும் பேரூராட்சிகளின் இயக்குநரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு மே திங்கள் 07-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவம்

பெறுநர்
திரு. M. பாலசுப்ரமணியன்,
எண். 2C 8வது குறுக்குத் தெரு,
K.R.M. நகர், அண்ணாமலைநகர் அஞ்சல்,
சிதம்பரம், கடலூர் மாவட்டம் 608 002

2. செயல் அலுவலர்,
அண்ணாமலை நகர் சிறப்புநிலை பேரூராட்சி, கடலூர் மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம், ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
~~இகோ~~/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்
12/5/26